மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது ஆதாரமற்ற செய்தி. ஆடிட் அப்ஜக்ஷன் வர இடம் இல்லை. வேலை முடிந்த பிறகுதான் ஆடிட் செய்யப்படும். தவறான நோக்கத்தை ஏற்படுத்த வேண்டாம்.

அனுப்பர்பாளையம்-சாமுண்டிபுரம் சாலை.

* 516. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் 11—8—1971-ம் தேதி அனுப்பர்பாளையம்-சாமுண்டிபுரம் செல்லும் பாதை மற்றும் மூன்று பாதைகளை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் எனக் கேட்டு பொதுப்பணித் துறை அமைச்சருக்கு விண்ணப்பித்துள்ளாரா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) ஆம்.

(இ) அவருடைய கோரிக்கைகள் அரசினரால் ஆய்வு செய்யப்பட்டு அவருக்குப் பதில் அனுப்பப்பட்டது.

Contracts given by Highways Department

* 517 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state the total number of contracts given by the Highways Department during 1970–71 involving more than one lakh of rupees?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : 151.

திரு. என். டென்னிஸ் : அதிலே ஏதாவது ஒப்பந்தம் ரத்து செய்யப் பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கேள்வி . the total number of contracts given by the Highways department . . . . என்பதைப் பற்றியது. மூலக் கேள்வி எத்தனை வேலைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்ற விவரத்தைப் பற்றிக் கேட்கப்பட்டிருந்தால் அந்த எண்ணிக்கையைச் சொன்னேன். ரத்து செய்யப்பட்டது பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லப்படும்.

DR. H. V. HANDE : Is it not a fact that the system or method of giving contracts in the Highways Department has changed recently, viz., those over Rs. 5 lakhs are nowadays being